International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313

தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)

Volume: 06 Issue: 02 April to June 2024 www.irjtsjournal.org

# மொழிபெயர்ப்பின் முக்கிய விதிகள் மற்றும் இன்றியமையாப் பண்புகள்

## Basic Rules and Essential Characteristics of Translation

**முனைவர்த. சமுத்திரராஜ்**
தமிழ்உதவிப்பேராசிரியர்,
அறிஞர்அண்ணாகல்லூரி, （கலைமற்றும்அறிவியல்）
（பெரியார்பல்கலைக்கழகம், சேலம்）
கிருஷ்ணகிரி – 635 115 தமிழ்நாடு–இந்தியா

**Dr D.Samuthiraraj**
*Assistant Professor In Tamil,*
*Arignar Anna College （Arts& Science）*
*（Periyar University, Salem）*
*Pollupalli, Krishnagiri – 625 115, Tamilnadu – India*

**ஆய்வுச்சுருக்கம்:-**

பதினொட்டாம், பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வளர்ச்சி நிலை எட்டிய மொழி பெயர்ப்பு வளர்ச்சி நிலையை பெயர்த்து முதன் முதலில் பள்ளிகளுக்கு தேவையான நூல்களை மட்டும் தமிழ்மொழியில் தரும் நிலையில் அடியெடுத்துவைத்தன. 19 ஆம் நூற்றாண்டின் இடையில் ஆங்கில மொழிவளர்ச்சி நிலையில் பள்ளி மாணவர்களிடையே தமிழ்ப்பாடம் தவிர்த்து ஏனையபாடங்களை ஆங்கில மொழியில் படிக்கும் சூழ்நிலை உருவனதால் மொழிபெயர்ப்புப் பணி தொய்வு நிலையினைஅடைந்தன. 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே அவரவர் தாய்மொழியில் பள்ளிக் கல்வியைபயில வேண்டும் என்ற நோக்கத்தினால் மொழிபெயர்ப்பு பணியானது மீண்டும் வளர்ச்சி நிலையினை பெறதுவங்கின. இதனால் அனைத்துதுறை ஆராய்ச்சி முடிவுகள், கட்டுரைகள், புதியக்கண்டுபிடிப்புகள், வேளாண்தொழில்நுட்பங்கள், அறிவியல் தொழில் நுட்பங்களை அறிந்து கொள்ளும் விதமாக தமிழ்மொழியிலேயே மொழிபெயர்த்துதர வேண்டிய அவசியத்தின் தேவைக்கருதி மொழிபெயர்ப்புப் பணியில் கவனம் செலுத்தப்பட்டது. இரண்டாயிரமாண்டுக் காலமாகப்பாலி, பிராகிருதம், சமஸ்கிருதம் போன்ற மொழிகளிலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட முயற்சிகள், கருத்து நிலையில் அமைந்தனவாகும். ஒரு நூலினைவரிக்கு வரி முழுமையாக மொழிபெயர்ப்பது, மேலை நாட்டவரின் பெயர்ப்புடன் தொடங்குகின்றன.

**“செப்புமொழிபதினெட்டுடையாள்**
**எனினும்சிந்தனைஒன்றுடையாள்”**

ஆக, அமேசான்நதிக் கரையோரத்தில் ஒருவன் காணுகின்றகனவுகள் காவிரிக்கரையோரத்தில் இருக்கின்ற ஒருவனுக்கு இனிமேல்புலனாக வேண்டும்.

**“சென்றிடுவீர் எட்டுத்திக்கும் - கலைச்**



© 2024, IRJTSR 

**செல்வங்கள் யாவும் கொணர்ந்துதிங்கு சேர்ப்போம்”**

-**பாரதியார்**

என்று மொழி பெயர்ப்பில் நம்மில் காணப்படுகின்ற குறையைப் போக்குவதற்கு மொழிபெயர்ப்பாளர்கள் துணிந்து செயல்படுமாறு உத்தரவிடுகிறார். இருப்பினும் பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் நூறுக்கும் மேற்பட்டவை தமிழ்மொழியில் மொழிபெயர்க் கப்பட்டுள்ளன என்பதால் மொழி பெயர்ப்புக்குரிய முக்கிய விதிகள், பண்புகள் குறித்து எனது அறிவிற்கு எட்டிய நிலையில் சில கருத்துக்களை இக்கட்டுரையின் வாயிலாக எடுத்துரைக்க காண்போம்.

**முன்னுரை:-**

மொழிபெயர்ப்பாளர் பல்துறை அறிவினை பெற்றவராக இருத்தல் வேண்டும் என்பது முக்கிய தகுதிகளாக அமைகின்றனஎன் பதில் சிறிதும் ஐயமில்லை. மொழிபெயர்க்கும் பொழுது, மொழிபெயர்ப்பு விகுதிகளை பின்பற்றியே செயல்பட வேண்டியது கட்டயமானதாகும். அதாவது, ஒருமொழியில் சொல்லப்பட்ட செய்தியினை அப்படியே மற்றொரு மொழியில் மாற்றி அமைத்துதருவதாகும். அவ்வாறு மாற்றித்தரும் பொழுது மூல மொழியில் உள்ளகருத்துக்கு முக்கியத்துவம் தரவேண்டும். ஏனெனில் குறிக்கோள் மொழியில் அப்படியே மூலமொழிகருத்துக்களை சிதையாமல் தருதல் வேண்டியது இன்றியமையாதாகும். படிக்கும் வாசகர்களுக்கு பொருள் புரிதலில் குழப்பத்தை ஏற்படுத்திதரக் கூடாது என்பதில் கவனமாக இருக்க வேண்டும். இதில்கவனிக்க வேண்டியது தமிழ்மொழி பெயர்ப்பு ஏனெனில் கற்பனை, உணர்ச்சி போன்றவற்றிக்கு இடம்தரமுடியும். ஆனால் அறிவியல் மொழிபெயர்ப்பு ஏனெனில் உள்ளதை உள்ளபடியே பொருள் தரும்படி மொழிபெயர்ப்பது சிறப்பானதாகும். மூலமொழி >குறிக்கோள் >மாற்றம் >செம்மையாக்கம் >கருத்தைஉள்வாங்கல் >ஒருமுறைக்கு பலமுறை ஒப்பிட்டு தெளிவுவடைதல் >சான்றோர்களிடம் விவாதித்து தன்நிலையை அடைதல், பின்னர் நூல்வெளீயிடல் போன்றவை முக்கிய மானதாகும்.

**“தொகுத்தல், விரித்தல், தொகைவிரி, மொழிபெயர்த்து**
**அதர்ப்படயாத்தலோடுஅவைமரபினவே”**

- தொல்காப்பியம். ( நூற்பா1597 )

**மொழி பெயர்ப்புப் படி நிலைகள்:-**

மொழிபெயர்ப்பில் முக்கியப்படி நிலைகளாகநைடா குறிப்பிடுகின்ற நான்கு நிலைப்பாடுகள் முக்கியத்துவம் பெறுகின்றன. மொழிபெயர்ப்பு, பகுப்பாய்வு, மாற்றுதல், செம்மையாக்கம் என்பவனவாகும். பகுப்பாய்வில் மொழிபெயர்ப்பாளர் மூலமொழியின் சொற்களுக்கிடையே காணப்படுகின்ற இலக்கண உறவுகளையும், சொற்களின் சேர்க்கைகளுக்கிடையில் நிலவும் இலக்கண உறவுகளையும் உற்று நோக்கிப்பகுப்பாய்வு செய்திடல் வேண்டும். சொல்லையும் சொல்லிற்குரிய பொருளையும் இணைக்கும் போது இணைக்கும் சொற்பொருளை நுணுகிப்பார்த்திடல் வேண்டியது முதல்நிலையில் பெரும் முக்கியத்துவத்தை பெறுகின்றன. எனெனில் ஒரு சொல்லுக்கு பலபொருள் இருப்பதால் பேசுகின்ற சூழ்நிலைக்கு ஏற்பதகுந்தாற்போலும், சொற்கள் சேருகின்ற நிலைக்குத் தகுந்தாற்போல் பொருள் மாறுபடுவதாலும் கவனமாக செயல்படவேண்டிய சூழ்நிலையை உருவாக்குகின்றன.

மொழிபெயர்க்க வேண்டியப் பகுதிகளை ஒருமுறைக்கு பலமுறைபொருள் புரியும் படி அறிந்து தெளிதல் வேண்டும். தெளிவுக்குப்பின் அவற்றைப்பல் அளகுகளாகப் பிரித்தல் வேண்டும். பிரிக்கும் பொழுதே அவற்றின்தன்மை. பொருள், அமைப்பு போன்றவற்றில் உள்ள சிக்கல் களையும் அறிந்து கொள்ள வேண்டும். அறிந்து கொண்டாதன் காரணமாக பகுப்பாய்வு கூறுகளுக்கு இணையான சொற்களைக் கண்டறிதல் முக்கியப்பணியாகும். இப்பணியில் மூலமொழியிலிருந்து குறிக்கோள் மொழிக்கு ( source Language > Target Language ) கருத்துக்களை கொண்டு சொல்லும் பொழுதுமையக் கருத்திற்கே முக்கிய இடமளிக்க வேண்டும். சொல், முற்றுத்தொடர், மரபுத்தொடர் போன்ற வற்றைமனத்தில் இருத்திக் கொள்ள வேண்டியது முதன்மையானதாகும். மொழிபெயர்ப்பாளர் பகுப்பாய்விற்கு முக்கியத்துவம் தருகின்ற பொழுது மூலமொழியின் பொருளை மாறுபடாது மிகதெளிவாகப் புரிந்து கொள்ள உதவுகின்றன.

**மாற்றுதல்:-**

தமிழிலிருந்து ஆங்கிலத்திற்கு மாற்றும் நிகழ்வானது மொழிபெயர்ப்பாளரின் மூளையில் நடைபெறுகிற செயலாகும். ஏற்கனவே, தன் மனத்துள் அறியப்பட்ட மூலமொழிச் செய்தியை எண்ணி, எண்ணித்துணிந்து மொழிபெயர்ப்புக்கு எடுத்துக்கொண்ட தொடர்களின் வடிவம், நடையழகு, போன்றவற்றில் கவனமாயிருப்பின் செய்தியில் உள்ள இலக்கண நோக்கு மற்றும் பொருண்மை நோக்கு அடிப்படையில் மாற்றுவதே மாற்றுதலாகும். அவ்வாறு மாற்றும் பொழுது பொருட்பிழையின்றி தெளிவாக சொல்வதிலேயே கூடுதல் கவனம் செலுத்துதல் வேண்டும்.

**செம்மையாக்கம்:-**

இருமொழிகளுக்கு கிடையில் நடைபெறும் மாற்றங்களையும் அவற்றின்காரணிகள், வெளிபாடுகள், அமைப்புகள், பொருள் குறிப்பிடும் தன்மை ஆகியவற்றை உணரவேண்டும். உணர்ந்தவற்றை மொழிபெயர்ப்புக்குள் கொண்டுவர வேண்டும் எனபதை மொழிபெயர்ப்பாளன் உணர்ந்து இரண்டு மொழிகளுக்குகிடையே உள்ள சொற்கள், தொடர்கள், தொடர்கள் உணர்த்தும் பொருள்தன்மை, தொடர்கள் அமையும் விதம் ஆகியனவற்றையும் அறிந்த பின்பு கருத்துக்களை சரியாக கொண்டு செல்வது என்பதுகடினமானது என்றாலும் இருமொழி இணையும் போது அவற்றுள் நிகழ்கின்றனவற்றுள் மூலமொழி >பெறுமொழி இடம் பெறுகின்றன. இதில், மூலத்தின்கருத்து முழுமையாக அனுப்பபடுகின்றன.

இந்நிகழ்வில் சொற்களை நேரடியாகக் கடன்வாங்குதல். கலப்புச்சொற்களை உருவாக்குதல், மொழிபெயர்த்தல், பழைய சொற்களுக்கு புதுப்பொருள் காரண, காரியத்துடன் கொடுத்து பயன்படுத்துதல் எனும் நான்கு நிலைகளில் நடை பெறுகின்ற மொழி மாற்றுதலில் இருமொழி சொற்களுக்குரிய நிலையில் மாற்றம் செய்யமால் சொற்கள் உணர்த்தும் கருத்துக் கேற்றசொல்லை தேர்ந்தெடுத்து பயன்பாட்டினை உணரசெய்தல் மொழிபெயர்ப்பாளனின் செம்மையானப் பணியாகும்.

**மொழிபெயர்ப்பாளரின் தகுதிகள்:-**

மூலமொழி உள்ள சொற்களுக்கு அப்படியே பொருளைகையாளுவதன் மூலம் பொருளை மிகச்சரியாக தருகிறோம் என்று நினைப்பதுதவறான சிந்தனையாக சிலரிடம் இருக்கிறது.

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

© 2024, IRJTSR

மூலமொழி சொற்களை சிறப்பாககையாளுவது தான் பெருமையெனகருதுவதும் உண்டு. எச்சூழ்நிலையிலும் மூலமொழி சொற்களைப் பயன்படுத்தவே கூடாது என்று நினைக்கும் பெயர்ப்பாளர்களும் உண்டு. இப்படியான வெளிப்பாடுகள் இருமொழிகளுக்கு கிடையே நடைபெறும் இயல்பான மொழிபெயர்ப்பாக அமைவதற்கு இச்செயல்களானது எவ்விதத்திலும் ஒத்துழைப்பைவழங்காது. மொழிபெயர்ப்பாளர் விருப்பு வெறுப்பு மின்றி மொழிகளையும், மக்களையும், பண்பாடுகளையும், மதிக்கும் அறிவியல் மனபான்மையுடையவராக இருத்தல் வேண்டும். மூலமொழிக் கருத்துக்களை வெளிப்படுத்துவதில் கையாளப்படும் உத்திகள், கோட்பாடுகள் ஆகியனவைப் பற்றிய அறிவானது இருமொழி மாற்றுதலுக்கு மிகவும் இன்றியமையாததாக இருக்கின்றன. இந்நிலைப் பாடுகளை வெளிப்படுத்தும் பொழுது இயல்பான மொழிபெயர்ப்பு அமைவதற்கு பெரிதும் துணைபுரிகின்றன. இயலபான ஆக்கத்திறனும், தன்னாக்கத்திறனும் தேவையாக அமைகின்றன. சொற்களைத் தேர்ந்தெடுத்து பயன்படுத்துவதில் தான் மொழிபெயர்ப்பாளனின் வெற்றி அமைகின்றன. இந்த வெற்றிக்கு மொழித்திறன், அறிவுக்கூர்மை, ஆகியவற்றை இயல்பாகவே பெற்றிருத்தல் கூடுதல் பண்பாகும். சற்றுக்கடின மானபணி என்பதால் ஈடுபடுபவர் மூலமொழியில் திறம்பட அறிவு பெற்றவராகவும், அறிவோடு அன்பு செலுத்தக்கூடியவராக இருந்தால் இத்துறையில் எளிதாக வெற்றியாளராக முடியும்.

மொழி பெயர்ப்புப் பணியில் முதற்சிறப்பு மூலநூலாசிரியரின் உள்ள பாங்கைவெளிப்படுத்துவதுடன் ஆசிரியனுடைய உணர்ச்சி, துடிப்பு, நோக்கம், போக்கு ஆகியவற்றை நன்கு புரிந்து கொண்டு அவற்றைச் செறிவாக மொழிபெயர்க்கும் கடமை, மொழி பெயர்ப்பாளருக்கு உள்ளது. ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கும் தமிழிலிருந்து ஆங்கிலத்திற்கும் இடையே நடைபெறும் ஒத்துழைப்பே மொழிபெயர்ப்பாகும்.

**மொழி பெயர்ப்பாளர் அடையும் சிக்கல்கள்:-**

இருமொழிப்புலமை, மொழிபெயர்ப்புப் பணியில் ஆர்வத்தினை ஏற்படுத்தி கொள்ளுவது முதல் தகுதியாகும். இதில், எதிர்கொள்ளும் சிக்கல்கள் பல. அவற்றைக் கடுமையான உழைப்பாலும், முயற்சியாலும் கடந்து செல்பவராக இருக்க வேண்டும். ஆயினும், மொழிபெயர்ப்பாளர்யாருமே, முழுமையான உள் நிறைவுடன் தம்பணியை முடித்ததாகக் கூறவில்லை என்பது இத்துறையின் நிலைப்படாகும்.

**முடிவுரை:-**

ஒரு நாட்டில் வாழும் மக்கள் பரந்தப்பட்ட அறிவுபெற வேண்டுமாயின் சிந்தனைச் செல்வத்தின் சிறப்பு, இலக்கியவளம் ஆகியவற்றை உலக் இலக்கியங்களோடு ஒப்பீட்டு மதிப்பீடு செய்து அதன் ஒற்றுமை, வேற்றுமைகளை உலகிற்கு உணர்த்த வேண்டும். நாளும் பெருகிவரும் அறிவுக்கலைகளையும் அறிவியல் தொழில்நுட்பவளர்ச்சி நிலையையும் பார்த்துப் பயணிக்கிற நம் நாட்டில்வாழும் மக்கள் அனைவரும் தாங்களாகவே படித்து அறிந்து கொள்ள இயலாதநிலையில் இருமொழி, மும்மொழித்திறன் வாய்க்கப் பெற்ற அறிவு பெரு மக்களால் மொழிபெயர்க்கப்பட்டு அவற்றை நாட்டு மக்களுக்குத் தன்னுடைய தாய்மொழி வழியே எடுத்துரைத்து அறிவுப் பாதையை அகலமாக்க முனைப்போடு செயல்படுவ தொல்லம் மொழிபெயர்ப்பின் முக்கிய பண்புகளாகும். இப்பண்பினால் ஒருமொழி இருமடங்கு வளர்ச்சியைப் பெறுகிறது என்பதில்

ஐயமில்லை. எழுத்து விதைகள் இதயங்களில் தூவப்படும் போது செழித்துவளர்வது ஒருதனிமனிதன் அல்ல..... சமுதாயம் என உணர்த்தும் பணிகளில் இன்றியாமையதாது மொழிபெயர்ப்பாகும்.

**பார்வைநூல்கள்:-**


[1] **பேரா.கா.பட்டாபிராமன்**, **மொழிபெயர்ப்புக்கலை**, **பக்**. 1, 134, **நியூசெஞ்சுரிபுக்ஹவுஸ்** (பி)லிட், 2005, **சென்னை**.

[2] **முனைவர்ந. அரணமுறுவல்**, **தமிழும்மொழிபெயர்ப்புமுறைகளும்**, **பக்**. 103, **பாவைபப்ளிகேஷன்ஸ்**, 2005, **சென்னை**.

[3] **பேரா. டாக்டர்ரா. சீனிவாசன்**, **மொழியியல்**, **பக்**. 3, **முல்லைநிலையம்**, **சென்னை**.

[4] **மு. வளர்மதி**, **மொழிபெயர்ப்புக்கலை**, **பக்**. 54, **திருமகள்நிலையம்**, 2003, **சென்னை**.

[5] K.V.V.L NARASIMHA RAO, ASPECTS OF TRANSLATION, PAGE. 42, CENTRAL INSTITUTE OF INDIAN LANGUAGES, 2005, MYSORE